[1968 பிப்ரவரி 28

திரு. அ. பொ. அரசு : கட்டணக் குறைப்பு என்று அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிருர்கள். அதனுல் சென்னையில் இருந்து ஊத்துக்கோட்டைக்கும், பெரியபாளையத்துக்கும் செல்கிற அரசாங்க பஸ்களில் ஒலு ப்ளாட்ரேட் வைத்திருக்கிருர்கள். சென்னை யில் இருந்து மாதவரம் போகிற தனியார் பஸ்களில் 20 பைசா, அரசாங்க பஸ் என்ருல் 50 பைசா என்று இருக்கிறது. இதனுல் அரசாங்க போக்குவரத்து இலாகாவுக்கு உண்மையில் நட்டம் ஏற்படுகிற தென்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : அதுபற்றி கனம் உறுப்பினர் இதுவரை தெரிவிக்காமல் இருக்கும்போது எப்படித் தெரியும் ?

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, குமரி மாவட்டத் தில் சர்க்கார் பஸ்களில் மூலமாக ஏராளமான நஷ்டம் வந்திருப்ப தாக ஒரு பத்திரிக்கைக் குறிப்புக் கூறுகிறதே, அது எந்த அளவுக்கு உண்மை ?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : இது மொத்த லாபநஷ்டக் கணக்கை பார்க்கிறபோது தெரியாது. தனிக்கேள்வி போட்டால் விவரம் தெரியும்.

திரு. ந. காசிராமன் : 1—3—1967 இல் 127 பஸ்கள் ஒரு நாளைக்கு எத்தனை ட்ரிப்புகள் ஓடின ? 31—5—1967 இல் 135 பஸ்கள் ஒரு நாளைக்கு எத்தனை ட்ரிப்புகள் ஓடின என்று கூற முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : இந்த விவரங்கள் இல்லை.

(திரு. வி. கே. கோதண்டராமன் எழுந்திருந்தார்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தக் கேள்விக்கு நான் 15 நிமிடங்களுக்கு மேல் கொடுத்திருக்கிறேன். அடுத்த கேள்வி 93 எடுத்துக்கொள்ளப்படும்.

***93 வின.—திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவிற்கு விடை யளிப்பாரா—

திருச்சிராப்பள்ளிக்கும் குற்ருலத்திற்குமிடையே அரசாங்க பஸ் விடும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : இல்லை.

11–00 முன் பகல்

திரு. வை. சுவாமிநாதன் : குற்ருலம் இப்பொழுது தமிழ் நாட்டி னுடைய ஏழைகளின் வாசஸ்தலமாக இருக்கிறது. ஆகவே சீஸன் காலத்திலாவது பஸ் விட ஏற்பாடுகள் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : தஞ்சாவூரிலிருந்து செங் கோட்டைக்குச் செல்கின்ற பஸ்ஸில் குற்ருலத்திற்குச் செல்வதற்கு வழியிருக்கிறது. நாகர்கோவில், நாகப்பட்டிணம், தூத்துக்குடி, கொல்லம் இந்த இடங்களுக்குப் போகின்ற பாதையிலே குற்ருலத்தை இணைத்துப் பாதைகள் போகின்றன. மேலும் தேவைப்படுமானுல் அதுபற்றி யோசித்து முடிவு எடுக்கப்படும்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குற்ருலத்தில் சீஸன் ஏற்படுகின்ற காலத்தில் பல்வேறு நகரங்களி லிருந்து, திண்டுக்கல் மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் போன்ற இடங்களிலிருந்து குற்ருலத்திற்கு தனியார் துறையினர் பல

பஸ்களை விடுகிறார்களே, அதுபோன்று அரசாங்கமும் சர்க்கார் துறையில் பஸ் விடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பொதுவாக எல்லாச் சிறப்பு நிகழ்ச்சிகளின்போதும், விழாக்களுக்கும்கூட அவ்வப்பொழுது அரசாங்க பஸ்கள் விடப்படுகின்றன. அதைப்பற்றிய கோரிக்கைகளை பொது மக்கள் வைத்தால் அதுபற்றிக் கவனிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல், குற்றாலம், உதகமண்டலம் போன்ற வாசஸ்தலங்களுக்கு அதிகமாகப் பிரயாணிகள் போகக்கூடிய வகையில், உற்சாகப்படுத்துகின்ற முறையில் அரசாங்கம் துரித பஸ்களில், போகவர, ரிட்டர்ன் டிக்கட் கொடுப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதுபற்றி யோசிக்கலாம்.

*** 94. வினா—திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளிக்கும் பழனிக்குமிடையே அரசாங்க பஸ் விடும் உத்தேசம் ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவரவர்களே, பொதுவாக திருச்சியிலிருந்து பழனி செல்வது என்றால் இடம் கிடைக்காமல் பயணிகள் கஷ்டப்படுகிறார்கள். ரிசர்வ் செய்தவர்களுக்குக்கூட சில சமயங்களில் இடம் கிடைக்காமல் கஷ்டப்படுகின்ற காரணத்தினால் அரசாங்க பஸ்கள் அங்கு விடுவதற்கு அரசாங்கம் புனராலோசனை செய்ய முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தஞ்சையிலிருந்து பழனிக்கு செல்லுகின்ற பேருந்துகள் திருச்சி மார்க்கமாகச் சென்று கொண்டிருக்கின்றன. அதிகம் தேவையென்று இயக்குநர் அவர்கள் பரிசீலனை செய்வார்களானால் அதைச் சர்க்கார் கவனிக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நாகர்கோவிலிலிருந்து சென்னைக்கு ஒரே பஸ் கூடுதல் வசதிகளுடன் குறைந்த சீட்டுகளுடன் உள்ள ஒரு பஸ்ஸை விடுவதற்கு முந்தைய அரசு திட்டமிட்டிருந்தது. அதை இந்த அரசாங்கம் மேற்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தக் கேள்வி மூலக் கேள்வியில் இடம்பெறவில்லை. இதில் உறுப்பினர் அவர்களுக்கு அக்கறை இருக்குமானால் தனியாகக் கேள்வி போட்டால் அவருக்கும் நல்லது எல்லோருக்கும் நல்லது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி திருச்சியிலிருந்து பழனிக்கு அரசாங்க பஸ் விடுவதைப்பற்றியது. ஆகவே அதைப்பற்றிய கேள்விகளை மட்டும் கேட்கவேண்டும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : பழனியிலிருந்து தஞ்சைக்கு பஸ்விடுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் விடப்படாமல் இருக்கிறது. ஆகவே அதை விரைவிலே விடுவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதைப்பற்றி உறுப்பினர் நினைவுறுத்தி எழுதினால் கவனிக்கலாம்.